நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள்.22 .07.2021.

இயல்புக்கூட்டம்

அன்புடையீர்,

2021ம் வருடம் ஜீலை மாதம் 22.07.2021ந் தேதி வியாழக்கிழமை இயல்புக்கூட்டம் காலை11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலித்து முடிவு செய்ய இருக்கிறது.

தனி அலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.

பொருள்கள்

1 . ஆத்தூர் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாகம் ஆணையர் சென்னை அவர்களின் செயல் முறை கடிதம் நக.எண்7979/2020/LA3, நாள்30.06.2021ன் வாயிலாக 15வது நிதி குழு மான்யம் UnTied Grantன் கீழ் இரண்டாம் தவணைத் தொகையாக ரூ.90,57,166/—ஐ ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அதன்படி மேற்படி நிதியின் கீழ் ஆத்தூர் நகராட்சி பகுதிகளில் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதை தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதீப்பீடுத் தொகை இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | காந்தி நகர் பகுதியில் உள்ள மூன்று மேல் நிலை நீர்தேக்க தொட்டிகளில் இணைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 15.00 |
| 2 | வார்டு எண்கள் 31 மற்றும் 32ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 15.50 |
| 3 | வார்டுஎண்கள்29 மற்றும் 30 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 13.70 |
| 4 | வார்டு எண்கள்15,16,17 மற்றும் 18ஆகிய பகுதிகளிலுள்ள நகராட்சி பொது கழிப்பிடங்களை புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 9.90 |
| 5 | வார்டு எண்கள்28,30,31,32மற்றும்33ஆகியபகுதிகளிலுள்ள நகராட்சி பொதுகழிப்பிடங்களைபுனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 9.80 |
| 6 | மேல் நிலை நீர்தேக்கத்தொட்டிகளில் உள்ள பழைய வால்வுகளை எடுத்து விட்டு புதியதாக வால்வுகளை மாற்றி பொருத்துதல் பணி | 7.00 |
| 7 | வார்டு எண்கள்8,9,13 மற்றும் 14ஆகிய பகுதிகளிலுள்ள நகராட்சி பொது கழிப்பிடங்களை புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 9.90 |
| 8 | வார்டு எண்கள்1,2,5,6 மற்றும் 7ஆகிய பகுதிகளிலுள்ள நகராட்சி பொது கழிப்பிடங்களை புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 9.80 |
| | மொத்தம் ரூ. | 90.60 |

அலுவலகக் குறிப்பு

1.தனி அலுவலர் மேற்படி கடிதத்தினை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2.மேற்படி பணிக்கு நிதிஒதுக்கீடு செய்தது போக மீதமுள்ள தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

3. இப்பணிகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும், செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1977/2020/இ1)

2. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஈப்புவாகனம் TN.77.E.7053க்கு ஆயில் சர்வீஸ் வீல் அலாய்மெண்ட்,வீல் பேலன்ஸ் மாற்றுதல் மற்றும் பொதுபரிசோதனை ஆகியன செய்தல் பணிக்கு பணியின்அவசர அவசியம் கருதி வாகனத்தை கொள்முதல் செய்த நிறுவனத்தில் ஈப்பு வாகனம் ஒட்டுனர் சொந்த செலவில் செய்த செலவினம் ரூ. 6070/—ஐ ஈப்பு வாகனம் ஒட்டுனர் திரு.எ.மணி என்பவருக்கு வழங்க தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து வழங்கவும், தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

2. ஈப்பு வாகனம் பாதுகாப்பு கருதி வாகனத்தை கொள்முதல் செய்த நிறுவனத்தில் ஈப்பு வாகனம் ஒட்டுனர் சொந்த செலவில் செய்த செலவினம் ரூ. 6070/—ஐ ஈப்பு வாகனம் ஒட்டுனர் திரு.எ.மணி என்பவருக்கு வழங்க தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.(ந.க.எண் 1840/2021/இ1)

3. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையவளாகத்தின் மேற்குபுறமுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பிடங்கள் கட்டி சுமார் 40 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் அடிக்கடி பழுது ஏற்பட்டுள்ளதை அவ்வப்போது சிறு சிறு பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது வரை பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி கழிப்பிடத்தின் மேற்கூரையின் மேல் கட்டப்பட்ட Masonry tank சில நாட்களாக பெய்த கனமழை காரணமாக தண்ணீர் தொட்டியின் சுவர் மற்றும் அடிதள காண்கீரீட் பகுதிகள் மிகவும் பழுதடைந்து காண்கீரீட் பூச்சு பெயர்ந்து விழும் நிலையில் உள்ளதால் இது குறித்து பொது மக்களிடயே கோரிக்கை வந்த வண்ணமாக உள்ளதால் பொது மக்களின் பாதுகாப்பு கருதி மேற்படி தண்ணீர் தொட்டியை பழுது மற்றும் சிறு சிறு பராமரிப்பு பணிகள் செய்யவும், தண்ணீர் தொட்டியின் மேல் பகுதியில் உள்ள சிலாப்கள் உடைந்துள்ளதை மாற்றவும் ஆகும், உத்தேச செலவினம் ரூ. 60,000/—க்கு தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம், செலவினத்தை வருாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும், தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படிபணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை தொடரவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் 1898/2021/இ1)

4. ஆத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்ட கீழ்க்கண்ட வாகனங்கள் வாங்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேல் ஆவதாலும், அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு சரி செய்ய கூடுதல் செலவினம் ஆவதாலும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

| வ.எண் | வாகனம் விபரம் | வாகனம் எண் | வாகனம் வாங்கப்பபட்ட தேதி |
|---|---|---|---|
| 1 | Karuda 3 Wheeler Auto | TN27X2325 | 21.05.1998 |
| 2 | VST Tillers Frachra Power Oriller | TN27X2576 | 12.06.1998 |
| 3 | Bajaj 3 wheeler Auto | TN30T0387 | 13.10.2005 |
| 4 | Bajaj 3 wheeler Auto | TN30T0387 | 13.10.2005 |
| 5 | Bajaj 3 Wheeler Auto | TN30T0389 | 13.10.2005 |
| 6 | Piaggio 3 Wheeler Auto | TN30T8514 | 31.01.2007 |

மேற்படி வாகனங்களை கழிவு செய்து, ஏலம் விடுவதற்கு வ.எண் 1 மற்றும் 3 முதல் 6 வரை உள்ள வாகனங்களுக்கு தானியங்கி பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, சேலம் அவர்களிடம் சான்று பெறலாம். வ.எண் 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் கழிவு செய்ய செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, சேலம் அவர்களிடம் இருந்து சான்று பெற்று மேற்படி வாகனங்களை ஏலம் விட்டு கழிவு செய்ய தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 1898/2021/இ1)

அலுவலக குறிப்பு :

1. மேற்படி வாகனங்கள் கழிவு நீக்கம் செய்வதற்கும் சான்று பெறவும் ஏலம் விடுவதற்கு தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. மேற்படி வாகனங்கள் கழிவு நீக்கம் செய்ய சான்று பெற்ற பின்பு பொது ஏலம் விட்டு நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

3. மேற்படி வாகனம் ஏலம் விடுவதற்கு ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.(ந.க.எண் 2005/20201/ எச்1)

5. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் வாகன எண்–TN 30 Q 3724–ன் பழுதுகள் சரிபார்க்க ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட SK Motors நிறுவனத்திற்கு ஆகும் செலவினத்திற்கும், பணி உத்தரவு வழங்கவும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

1. S K Motors – ரூ. 93,580/–
2. Vellavan Auto, Diesel Labour workers – ரூ. 1,01,200/–

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள SK Motors நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தொகையை திடக்கழிவு மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க தனி அலுவலர் அனுமதிக்கலாம். (ந.க.எண் 1123/2020/எச்1)

6. ஆத்தூர் நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வந்த ஜெனரேட்டர் பழுதடைந்து தற்போது மின்தடைஏற்படும் போது இயங்காமல் உள்ளதால் அலுவலகப்பணிகள், வரியினங்கள் மற்றும் காசாளர் வசூல் பணிகள் பாதிக்கப்படுவதால் பொதுமக்கள் பெரிதும் அவதிக்குள்ளவதால் அதனை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளதால் நிர்வாக நலன் கருதி தொடர்ந்து திருமதி .சத்யா எலக்ட்ரிகல்ஸ் ஆத்தூர் என்பவர் மூலம் ஜெனரேட்டரை இயக்க, ஆகும் செலவினத்தொகை ரூ26,000/–க்கு தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

3. ஜெனரேட்டர் பழுது நீக்கும் பணியினை திருமதி .சத்யா எலக்ட்ரிகல்ஸ் ஆத்தூர் என்பவர் மூலம் பணிமேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதிக்கலாம். (2073/2021/இ1)

7. ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீன்–2021 மாதத்திற்கான நாட் குறிப்பினை தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

தனிஅலுவலர் பதிவு செய்யலாம்.

22/7/2021

தனிஅலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.

22/7/21